சுருக்கம்

தொழில்நுட்பக் கல்வி – தமிழ்நாடு பொறியியல் கல்லூரி மாணவர் சேர்க்கை – கல்லூரி மற்றும் பாடப்பிரிவு மாற்றம் குறித்த நெறிமுறைகள் – ஆணைகள் வெளியிடப்படுகிறது.

உயர்கல்வி (ஜே2) துறை

அரசாணை (நிலை) எண்.434 நாள் 23.10.2008.
ஐப்பசி 7,
திருவள்ளுவர் ஆண்டு 2039.

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.159, உயர்கல்வி (ஜே1) துறை, நாள் 20.4.1999.
2. அண்ணா பல்கலைக்கழகம், சென்னை பாடப்பிரிவு இயக்குநரின் கடிதம் எண்.1162/AUC/DD1-DAC/2008, நாள் 20.5.2008.
3. முதன்மைச் செயலாளர்/தொழில்நுட்பக் கல்வி ஆணையர், சென்னை கடித எண்.47917/ஜே1/2007, நாள் 26.9.2008.

-----

ஆணை:

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், தமிழ்நாடு பொறியியல் கல்லூரிகளில் ஒற்றைச் சாளர கலந்தாய்வில் கலந்துகொண்டு சேர்க்கை பெற்ற மற்றும் நிர்வாக ஒதுக்கீட்டின் கீழ் சேர்க்கை பெற்ற மாணவர்களுக்கு, இரண்டாம் ஆண்டில் கல்லூரி மற்றும் பாடப்பிரிவு மாறுதல் வழங்குவது தொடர்பாக பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள் குறித்து ஆணைகள் வெளியிடப்பட்டன.

2. மேலே மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் முதன்மைச் செயலாளர்/தொழில்நுட்பக் கல்வி ஆணையர், பொறியியல் கல்லூரி மாணவர்களுக்கு கல்லூரிகள்/பாடப்பிரிவு மாற்றம் தொடர்பாக வெளியிடப்பட்ட மேலே ஒன்றில் படிக்கப்பட்ட ஆணைகளுக்கு மாற்றாக, புதிய நெறிமுறைகளை வெளியிடக் கோரி கருத்துரு அனுப்பியுள்ளார்.

3. தொழில்நுட்பக் கல்வி ஆணையரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலனை செய்த அரசு, அதனை ஏற்றுக் கொள்ள முடிவு செய்து 2008–2009–ம் கல்வியாண்டு முதல் தமிழ்நாடு பொறியியல் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு கல்லூரி மாறுதல் / பாடப்பிரிவு மாறுதல் தொடர்பாக ஏற்கனவே மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் வெளியிடப்பட்டுள்ள நெறிமுறைகளுக்கு மாற்றாக பின்வரும் நெறிமுறைகளை வகுத்து அவ்வாறே ஆணையிடுகிறது:-

(1) ஒரு பொறியியற் கல்லூரியிலிருந்து மற்றொரு பொறியியற் கல்லூரிக்கு கீழ்காணும் பிரிவுகளுக்கிடையே மாற்றம் வழங்கப்படும்:-

| வ. எண். | மாணவர் பயிலும் பொறியியற் கல்லூரி பிரிவு | மாற்றம் வழங்கும் பொறியியற் கல்லூரி பிரிவு |
|---|---|---|

| | | |
|---|---|---|
| 1. | அரசு பொறியியற் கல்லூரிகள் மற்றும் அரசு உதவி பெறும் பொறியியற் கல்லூரிகள். | i) அரசு பொறியியற் கல்லூரிகள்<br>ii) அரசு உதவிபெறும் பொறியியற் கல்லூரிகள் |

| | | |
|---|---|---|
| 2. | சுயநிதி பொறியியற் கல்லூரிகள் | சுயநிதி பொறியியற் கல்லூரிகள் |
| 3. | அண்ணா பல்கலைக்கழகம் (உறுப்புக் கல்லூரிகள்) | அண்ணா பல்கலைக்கழகங்களின் உறுப்புக் கல்லூரிகளிலிருந்து அரசு/அரசு உதவி பெறும் பொறியியல் கல்லூரிகளுக்கோ அல்லது அரசு/அரசு உதவி பெறும் பொறியியற் கல்லூரிகளிலிருந்து அண்ணா பல்கலைக்கழகங்களின் உறுப்பு கல்லூரிகளுக்கோ மாறுதல் பெறலாம். |

(2) கல்லூரி மாற்றம் அளிக்கப்படும்போது, மாணவர் தற்போது பயிலும் அதே பொறியியற் பாடப்பிரிவிற்கே மாற்றம் வழங்கப்படும். மேலும், மாற்றம் கோரப்படும் கல்லூரியில் சம்பந்தப்பட்ட பாடப்பிரிவின் ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கைக்குள்ளாகவே மாற்றம் வழங்கப்படும்.

(3) பொறியியற் கல்லூரியில் சேர்க்கை பெற்ற மாணவர் ஓராண்டு படிப்பு முடித்த பின்னரே கல்லூரி மாற்றம் கோர தகுதியுடையவராவர். (அதாவது, முதலாமாண்டு பி.இ./பி.டெக். (Regular) / நேரடி இரண்டாமாண்டு பி.இ. /பி.டெக் முடித்திருக்க வேண்டும்).

(4) கல்லூரி மாற்றம் மூன்று, ஐந்து மற்றும் ஏழாம் பருவங்களில் (Semester) அதாவது கல்வியாண்டின் தொடக்கத்தில் மட்டுமே வழங்கப்படும்.

(5) **பல்கலைக்கழக மாற்றம்:**

ஒரு தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்துடன் இணைவு (Affiliation) பெற்ற பொறியியற் கல்லூரியிலிருந்து மற்றொரு தொழில் நுட்பப் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்ற பொறியியற் கல்லூரிக்கு மாற்றம் கோரும்போது பின்வரும் விதிமுறைகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும்:-

(i) ஒரு குறிப்பிட்ட பருவத்தில் கல்லூரி மாற்றம் கோரும் மாணவர், தற்போது பயிலும் கல்லூரி எந்த தொழில் நுட்பப் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றுள்ளதோ அந்த தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தால் நடத்தப்பட்ட முந்தைய பருவத் தேர்வுகளில்அனைத்து பாடங்களிலும் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

(ii) மாணவர், ஐந்து மற்றும் ஏழாம் பருவத்தில் கல்லூரி மாற்றம் கோரும்போது, மாற்றம் கோரப்படும் கல்லூரி இணைவுபெற்ற தொழில்நுட்பப் பல்கலைக் கழகத்திடமிருந்து தடையின்மைச் சான்றிதழ் பெற்று விண்ணப்பிக்க வேண்டும். (மூன்றாம் பருவத்தில் தடையின்மைச் சான்றிதழ் (No Objection Certificate) சமர்ப்பிக்கத் தேவையில்லை).

(iii) தன்னாட்சி பெற்ற பொறியியற் கல்லூரிகளுக்கு மாற்றம் கோரும்பொழுதும் மேற்காணும் விதிமுறைகள் கடைபிடிக்கப்பட வேண்டும்.

**(6) மாநிலங்களுக்கிடையேயான கல்லூரி மாற்றம்:**

(i) மாணவர் தற்போது பயிலும் பொறியியற் கல்லூரி பிற மாநில அரசினால் நடத்தப்படும் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றிருக்க வேண்டும் மற்றும் பல்கலைக்கழக மானியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்டிருக்க வேண்டும்.

(ii) தனியார் மற்றும் நிகர்நிலை பல்கலைக்கழகங்களுடன் (Private /Deemed University) இணைவு பெற்ற கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் விண்ணப்பிக்க இயலாது.

(iii) ஒரு குறிப்பிட்ட பருவத்தில் கல்லூரி மாற்றம் கோரும் மாணவர், தற்போது பயிலும் கல்லூரி எந்த தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றுள்ளதோ, அந்த தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தால் நடத்தப்பட்ட முந்தைய பருவத் தேர்வுகளில் அனைத்து பாடங்களிலும் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

(iv) மாணவர், மாற்றம் கோரும் கல்லூரி இணைவு பெற்ற தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்திடமிருந்து தடையின்மைச் சான்றிதழ் பெற்ற விண்ணப்பிக்க வேண்டும்.

**(7) பொதுவான விதிமுறைகள்:-**

(i) மேலே பத்தி **(1)–**ல் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து வகையான பொறியியற் கல்லூரி மாற்றம் கோரி பெறப்படும் விண்ணப்பங்கள் தொழில்நட்பக் கல்வி இயக்ககத்தின் மூலமாகவே பரிசீலிக்கப்படும்.

(ii) எக்காரணத்தை முன்னிட்டும் பாடப்பிரிவு மாற்றம் வழங்க இயலாது.

(iii) கல்லூரி மாற்றம் கோரப்படும் விண்ணப்பங்கள் சம்பந்தப்பட்ட இரு கல்லூரி முதல்வர்களின் ஒப்புதலைப் பெற்று சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(iv) கல்லூரி மாற்றம் கோரி பெறப்பட்ட விண்ணப்பங்களை நிர்வாகக் காரணங்களுக்காக ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ தொழில்நுட்பக் கல்வி ஆணையருக்கு முழு அதிகாரம் உண்டு.

(v) ஒரு பொறியியற் கல்லூரியிலிருந்து மற்றொரு பொறியியற் கல்லூரிக்கு இடைநீக்கத்திற்குப் பிறகு (Break of Study) அளிக்கப்படும் மாற்றம் பட்டப் படிப்பிற்காக சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகத்தால் நிர்ணயிக்கப்பட்ட கால அவகாசத்திற்கு உட்பட்டது.

(vi) கல்லூரி மாற்றம் குறித்தான ஆணை பிறப்பிக்கப்படும்வரை மாணவர் தற்போது பயிலும் பயிலகத்திலேயே தொடர்ந்து பயில வேண்டும்.

…4

(vii) நிகர்நிலை பல்கலைக்கழகத்தில் பயிலும் மாணவர்கள் மேலே **(1)–**ல் படிக்கப்பட்ட எவ்வகையான கல்லூரி மாற்றமும் கோர இயலாது.

(viii) மறுசேர்க்கையுடன் கூடிய கல்லூரி மாற்றத்திற்கு (Readmission cum transfer) மேலே படிக்கப்பட்ட விதிமுறைகள் பொருந்தும்.

(ix) பொறியியற் கல்லூரிகளில் பகுதிநேர பட்டப் படிப்பு (Part time B.E./B.Tech.) முதுநிலை பட்டப் படிப்பு (MBA/MCA/M.E./ M.Tech./M.Sc.) மற்றும் B.Sc. பயிலும் மாணவர்களுக்கு கல்லூரி மாற்றம் அளிக்க இயலாது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.கணேசன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
முதன்மைச் செயலாளர்/தொழில்நுட்பக் கல்வி ஆணையர், சென்னை–25.
பதிவாளர், அண்ணா பல்கலைக்கழகம், சென்னை / திருச்சிராப்பள்ளி / கோயம்புத்தூர் / திருநெல்வேலி.
அனைத்து பொறியியற் கல்லூரிகள் (முதன்மைச் செயலாளர்/தொழில்நுட்பக் கல்வி ஆணையர், சென்னை–25.)
நகல்
மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
உயர்கல்வித்துறையின் அனைத்துப் பிரிவுகள்
இ.கோ. / உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.